Registered with Registrar of Newspapers for India R.No.62828/95
Regd. No: TN / CC (S) DN / 119 / 09-11
Date of Publication 5th and 6th of Every month
Licensed to Post without Prepayment
WPP No. TN / CC (S) DN / 51 / 09-11
வேணு : 16 ஜனவரி 2011 கானம் : 6



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri.Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.
Related Websites : www.namadwaar.org Email:contact@namadwaar.org


ஸ்ரீ ஹரி:

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

Rs.12/-

# மதுரமுரளி

தெய்வீக மாதாந்திர பத்திரிகை



ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 16 | ஜனவரி 2011 | கானம் : 6

Delivered by India Post www.indiapost.gov.in







மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை - டிசம்பர் 5, 2010

தனலக்ஷ்மி திருமண மண்டபம் , கோவூர்



[illegible]




[illegible] தூத்துக்குடி [illegible] மேல்நிலைப்பள்ளி – மாணவர்களுக்கான
கூட்டு பிரார்த்தனை [illegible] பள்ளி [illegible]

[illegible]







நவம்பர் 22-30, 2010
நாராயண உபன்யாசம் – ஸ்ரீஸ்வாமிஜி – திருவண்ணாமலை யோகிராமசுரத்குமார் ஆஸ்ரமம்




Chennai Head



டிசம்பர் 4, 2010 வேலூர் அருகே – பொய்கை –
ஆதரவற்றோருக்கான இல்லத்தில் அன்னதானம், உடை வழங்குதல்



ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்


# மதுரமுரளி


தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 16 ஜனவரி 2011 கானம் : 6



| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர் - 178 | 04 | மன அமைதிக்கு வழி | 14 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 07 | சாதகரின் டைரிக்குறிப்பு-7 | 06 |


**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

ஒருவர் ஒரு காரியத்தை செய்து முடிக்க வேண்டும் என்று எண்ணினாரானால் அதை சாதித்தே தீருவார். அப்படி சாதிக்கவில்லை என்றால் அவரது எண்ணமே பொய் என்று ஆகி விடுகின்றது.

- மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

**2011 ஆங்கில புத்தாண்டில் வாசகர்கள் அனைவருக்கும் மேலும் சத்சங்கங்கள் கிடைக்கவும், மஹாமந்திர கீர்த்தனம் செய்யும் பாக்யம் கிடைக்கவும், எல்லாவிதமான நன்மைகள் ஏற்படவும், குருவருளும் திருவருளும் அனந்தமாக கிடைக்கவும் "மதுரமுரளி" பிரார்த்தனை செய்கிறது.**



## ஸ்ரீஸ்வாமிஜியின் மீது இயற்றப்பட்ட கீர்த்தனம்

ஜல் ஜல் தண்டை ஒலி ஒன்று கேட்டு கனவு ஒன்று கண்டேன் (கண்ணா கண்ணா)
தேனினுமினிய குழலூதும் நின்னை கண்டேன் (கண்ணா கண்ணா)
கனவினில் கண்கள் தானே திறந்திட (கண்ணா கண்ணா)
கொண்டை முதல் தண்டை வரை பிரேமிக வரதனை கண்டேன் (கண்ணா கண்ணா)

பாரதியின் காக்கை சிறகினிலே நந்தலாலா ஒலி கேட்டது (கண்ணா கண்ணா)
சுற்றும் முற்றும் நோக்க அருணைமலையை கோவர்த்தனகிரியென கண்டேன் (கண் ...)
பகவினங்கள் நின் திருப்பாதத்தில் பொழியும் பாசத்தை கண்டேன் (கண்ணா கண்ணா)
அக்கணமே மெய் மறந்த நான் நின் திருவடிகளை பற்றிக்கொண்டேன் (கண் ...)

என் அன்னை இளைய என் மனதில் புகுத்தியது ராதேகிருஷ்ணா (கண்ணா கண்ணா)
நீலநிறமோ என் தாயின் செல்ல வர்ணம் (கண்ணா கண்ணா)
வெண்மையான மனதே உனக்கு வெண்ணை அல்லவா (கண்ணா கண்ணா)
திடுமென தோன்றி அங்கே அன்புடன் அமர்ந்திடுவாய் (கண்ணா கண்ணா)

துவாரகையில் நினை தரிசித்தேன் (கண்ணா கண்ணா)
நின்னை ராதையுடன் நேரில் கண்டும் தெரியாமல் ஏமாந்தேனே (கண்ணா கண்ணா)
இருந்தும் என் பிரார்த்தனைக்கு உடன் பதில் பகர்ந்தாயே (கண்ணா கண்ணா)
ஏன் நினை என்னிடம் மறைத்துக் கொண்டாய் (கண்ணா கண்ணா)

நீயோ யோகிஜியாக மாறுகின்றாய் (கண்ணா கண்ணா)
அப்பிச்சைக்காரனோ நீயாக காட்சி தருகிறார் (கண்ணா கண்ணா)
மகான்களிடம் மனம் விட்டு பேச முடியுமா என்ற ஏக்கம் இருந்தது (கண்ணா கண்ணா)
அவ்வேக்கத்தை தணித்தனர் என் குருமகராதஜம் முரளிஜியும் (கண்ணா கண்ணா)

குரு பரம்பரை மற்றும் 'நினை' நினைப்பதே போதும் (கண்ணா கண்ணா)
பேச்சென்றாலோ அதே "கோல்"தான் இருக்க வேண்டும் (கண்ணா கண்ணா)
யோகிஜியிடம் நீயே சொல்லி மாயையை எனக்காக மறைத்திடு (கண்ணா கண்ணா)
குருவடி திருவடி தவிர வேறொன்றும் வேண்டிலேன் (கண்ணா கண்ணா)

நித்தம் நித்தம் நான் வணங்கும் சந்தன கிருஷ்ணனை (கண்ணா கண்ணா)
தூசிகூட படக்கூடாது என கண்ணாடி பேழையில் அடைத்துள்ளேனே (கண்...)
எங்கும் பரவியிருக்கும் உனக்கு சிறையென்பது மாயைதானே (கண்ணா கண்ணா)
அந்த 'உன்னை' குருஜியிடம் சேர்த்திட வேண்டும் என்பதுதான் என் பல்லாண்டு பேரவா (கண்...)

நமக்குள் பிரிவோ என்று ஏங்கவில்லை (கண்ணா கண்ணா)
என் இதயத்தில் யோகிஜி என்றால் நீயும்தானே (கண்ணா கண்ணா)
கிருஷ்ணன் என நினைத்தால் இப்பிச்சைக்காரன் கிருஷ்ணனே என்பார் யோகிஜி (கண்...)
அதே சிலிர்ப்பினை என் இதயத்தில் பொழிகிறார் முரளிஜி (கண்ணா கண்ணா)

லீலைகள் என்றாலே நீதானே (கண்ணா கண்ணா)
இந்த இடமாற்ற லீலை எனக்கு புரிந்துவிட்டதே (கண்ணா கண்ணா)
எனக்குப்பின் மேசை மீது கேட்பாரற்ற தாபம் கூடாது (கண்ணா கண்ணா)
பொக்கிஷத்தைப் பெற நீயே காட்டிவிட்டாயே முரளிஜியான நினையே (கண் ...)

உனக்கு நன்றி கூற வேண்டும் என்கிறது என் உள்ளம் (கண்ணா கண்ணா)
ஏனோ அதற்கு பயமொன்றும் பற்றிக்கொள்கிறது (கண்ணா கண்ணா)
காரணமோ ராதையை மறந்து அன்று உனக்கு மாலையிட்டேன் (கண்ணா கண்ணா)
ராதையே என் அன்னை சொன்னது ராதாகிருஷ்ணாதானே என சுட்டிக்காட்டினாள் (கண் ...)

உணர்ந்தேன் என் பாரபட்சத்தை (கண்ணா கண்ணா)
குருஜியின் அருளுடன் ராதா திருப்தியுற வாய்ப்பளித்தாள் (கண்ணா கண்ணா)
புரிகிறது அல்லவா நன்றியென்றால் ராதாகிருஷ்ணனுக்குத்தான் (கண்ணா கண்ணா)
ராதே கிருஷ்ணன், அரணமோ போன்ற யோகிஜியும் நானும் இணைந்திட அருள்வாயே (கண் ...)

குறிப்பு:
5.11.2010 - பணிவுடன் ஸ்ரீஸ்ரீமுரளீதரஸ்வாமிஜியின் 49ம் ஜயந்தி தினத்தன்று, நமஸ்காரத்துடன் நீதியரசர் ஜஸ்டிஸ் ஸ்ரீஅருணாசலம் (LifeTime Trustee Justice Sri Arunachalam, Bhagawan YogiRamSuratKumar Asram, Thiruvannamalai) அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கீர்த்தனம்.



## மதுரமான மஹநீயர் - 178

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

புதிய நாட்டிற்கு நாம் செல்கின்றோம். அந்த நாட்டில் ஒரு இடத்திற்கு செல்ல வேண்டுமானால், அந்த பாதையை பலரிடம் விசாரித்து தெரிந்துகொண்டுதான் செல்ல வேண்டி இருக்கின்றது. ஒரே இடத்திற்கு பல பாதைகள் இருக்குமானால், எல்லா பாதைகளை பற்றியும் தீர விசாரித்து நமக்கு உகந்த எல்லா விதத்திலும் பாதுகாப்பான பாதையை தேர்ந்தெடுத்து கொள்ள வேண்டி உள்ளது. அந்த பாதையில் நாம் பயணம் செய்ய ஆரம்பித்த பின்பும், பலரிடம் அவ்வப்பொழுது நாம் சரியான பாதையில்தான் செல்கின்றோமா என்று பலரைக் கேட்டு ஊர்ஜிதப்படுத்தி கொள்ள வேண்டி உள்ளது. இந்த உலகத்திற்குள்ளே இருக்கக்கூடிய இடத்திற்கே இவ்வளவு பாடுபட வேண்டி உள்ளது. இப்படியெல்லாம் விசாரித்து ஜாக்கிரதையாக செல்லும்பொழுதும் பலர் விபத்துக்குள்ளாகி விடுகின்றனர். கொலை செய்யப்படுகின்றார்கள். பொருள்கள் திருட்டு போகின்றன. தவறான வழியில் செல்ல நேரிடுகின்றது. அடிபடுகின்றது. ஆத்மாவின் பாதையோ அதிரஹஸ்யமானது என்றால், அதை அடைவது கடினம் என்பதை விட, எவ்வளவு கவனம் தேவை என்பதை கவனிக்க வேண்டும்.

அறிவுதான் ராஜா; சரீரம்தான் ராஜ்யம்; மனதுதான் மந்திரி; இந்திரியங்கள்தான் மந்திரியினுடைய உதவியாளர்கள்; மந்திரி பேச்சை கேட்டு அதன்படி ஆட்சி செய்யும் ராஜாதான், நம்முடைய ராஜா. மந்திரி என்ன சொன்னாலும் கேட்பார் நம் ராஜா. அப்படி மந்திரி நம்முடைய ராஜாவை மயக்கி வைத்துள்ளார். ராஜாங்கத்தின் பெரிய நிதியான இதய குகையில், ஆத்மா ஒளிந்திருக்கின்றது என்பது நமது மந்திரிக்கு தெரியும். ஆனால் ராஜாவை அது இங்கிருக்கின்றது, அங்கிருக்கின்றது, வானத்தில் இருக்கின்றது என்று பலவாறு சொல்லி, ராஜாவை ஏமாற்றி

வந்தார். அசட்டு ராஜாவும் அதை நம்பி கொண்டிருந்தார். சாதுக்கள் என்ற ஒற்றர்கள் மூலம் ஹிருதய குகையில்தான் நம் ராஜாங்கத்தின் நிதி இருக்கின்றது என்பதை கேள்விப்பட்ட ராஜா, உள்ளே சென்று அதை தேட முற்பட்டான். மந்திரியும், மந்திரியின் உதவியாளர்களும் அவனை பலவிதமாக திசை திருப்பி புத்தியை மயக்கி குழப்பி விட்டனர். ராஜா எவ்வளவோ முறை முயன்றும் நிதியை அடையும் பாதையில் முன்னேறவே முடியவில்லை. திரும்ப திரும்ப ஆரம்பித்த வீட்டிற்கே வந்தான்.

அவனுடைய ராஜ்யத்தில் உள்ள அன்னமய கோட்டை, பிராணமயகோட்டை, விஞ்ஞானமய கோட்டை, மனோமய கோட்டை , ஆனந்தமய கோட்டையில் ராஜாவால் அன்னமய கோட்டையை கூட தாண்ட முடியவில்லை. பிராணமய கோட்டையில் பிராணன்தான் ராஜா. மந்திரி ராஜாவை மயக்கியதால் பிராணனும் மந்திரிக்கு அனுகூலமாய் இருந்தான். மந்திரி விஞ்ஞான மய கோட்டையில் இருந்த ராஜாவின் இருப்பிடத்தை அன்னமயக்கோட்டைக்கே மாற்றி இருந்தார். ராஜா செய்வதறியாது திகைத்த பொழுது ஸாதுக்கள் என்ற ஒற்றர்கள் இதற்கு ஒரு உபாயம் சொன்னார்கள். நல்ல ஒரு குருவை அடைந்து மஹாமந்திரம் உபதேசம் வாங்கி கொள். அந்த மஹாமந்திரத்தை ஜபம் செய்து கொண்டே, உள்முகமான கோட்டையில் பிரவேசித்தால், மந்திரியும் அவனுடைய சகாக்களும் பயப்படுவார்கள் என்று சொல்லி கொடுத்தார்கள். அதன்படியே ராஜாவும் உடனே ஜபம் செய்தான். அவன் ஜபம் செய்ய செய்ய, மந்திரியும், அவனுடைய ஆட்களும், கொஞ்சம் கொஞ்சமாக வலு இழக்க அரம்பித்தார்கள். அவர்கள் முழுவதுமாக வலு இழந்த பொழுது ஆத்ம நிதி என்னும் ஜோதி, தன்னைத்தானே வெளிப்படுத்தி கொண்டது. ராஜாவும் அதில் ஐக்கியமாகி நிரந்தர ஆனந்தத்தை அடைந்தார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் உபன்யாசத்திலிருந்து இந்த விஷயத்தை பகிர்ந்து கொண்டேன்.



# ஒரு சாதகரின் டைரீக்குறிப்பு - 7


மகான்களின் சமாதிகளுக்கு செல்வது எனக்கு ஒரு பிடித்த விஷயம். அடிக்கடி பல மகான்களின் சமாதிகளை தேடி தேடி சென்று தரிசனம் செய்வேன். அந்த சமாதிகளுக்கு செல்லும்பொழுது அங்கேயே சில நாட்கள் தங்கி ஜப தியானங்களில் ஈடுபடுவேன்.

அப்படி தியானங்களில் ஈடுபடுவதற்கு முன் எனக்காகவும் மற்றும் சிலருக்காகவும் சில பிரார்த்தனைகளை செய்து கொள்ள வேண்டும் என்று நினைப்பேன். தியானத்தின் உயர்ந்த நிலையில் இருக்கும்பொழுது, அந்த பிரார்த்தனையை பற்றி நினைப்பு வராமலே போகும். தியானம் கழித்துதான் அந்த நினைவே வரும்.

நான் மறுநாள் ஒரு பேப்பரில் எழுதி எடுத்து கொண்டு செல்வேன். ஆனால், அந்த தியானத்தின் உயர்ந்த நிலையில், மனதில் எண்ணங்களே வராமல் ஆகி விடும். கஷ்டப்பட்டு அந்த எண்ணத்தை கொண்டு வர நினைத்தால் அது முதல் சில வார்த்தைகளுடன் நின்று விடும். அந்த பிரார்த்தனை வாக்கியத்தை முழுவதுமாக முடிக்கவே முடியாது.

தியானத்தின் ஒரு நிலையிலையே இப்படி இருக்கின்றது என்றால் ஞான நிலையில் **மகான்களுக்கு எண்ணங்களே வருவது இல்லை என்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை** என்று நினைத்து கொள்வேன்.

(தொடரும்)



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

**கேள்வி: ஸ்ரீமத்பாகவதத்தில் ஸனகாதிகள், சுகப்ரும்மம், ரிஷப யோகீஸ்வரர் போன்றோர் வஸ்திரமே அணியாமல் இருந்து வந்தார்கள் என்று படிக்கின்றோம். அதுபோல் ஸதாசிவ பிரும்மேந்திராள் போன்ற ஞானிகளும் இருந்திருக்கின்றார்கள் என்று படிக்கின்றோம். வஸ்திரம் இல்லாமல் இருப்பதுதான் ஞானத்தின் அடையாளமா?**

**பதில்:** அவர்களும் நம்மை போல் வஸ்திரம் அணிந்து கொள்ளத்தான் ஆசைப்படுகின்றார்கள். நாம் எலும்பும், தோலும், மாமிசத்தையும், ரத்தமும் கொண்ட இந்த சரீரத்தையே நான் என்று நினைக்கின்றோம். நம்மை நாமே, இந்த சரீரத்திற்குள் குறுக்கி கொண்டு விடுகின்றோம். அதனால் சுலபமாக அதற்கு விதம் விதமான ஆடைகள் அணிவித்து அழகு பார்க்கின்றோம். பிரும்ம ஞானிகளோ, இந்த அண்டசராசரத்தையே தங்களுடைய சரீரமாக நினைக்கின்றார்கள். அதனால், அதற்குத்தான் உடை அணிந்து கொள்ள வேண்டும். அவ்வளவு பெரிய துணி, அதற்கு தகுந்த டெய்லர் போன்றது கிடைக்காததால் அப்படியே விட்டு விட்டார்கள். அவ்வளவுதான்.

**கேள்வி: இதிஹாஸ புராணங்களில் மஹாத்மாக்களின் சன்னிதானத்தில் புலியும், ஆடும், சிங்கமும் மானும், தவளையும் பாம்பும் ஒன்றோடொன்று அன்பாக ஓடும் என்று பார்க்கின்றோம். ஆனால் நாம் இப்பொழுது பார்க்கும் மஹான்களின் சன்னிதானத்தில் மனிதர்கள் அன்பாக கூட வேண்டாம்; ஒற்றுமையாக கூட இருப்பதில்லையே?**

பதில்:நீங்கள் சொன்ன இதிஹாஸ புராணங்களை நன்றாக கவனித்தாலே இது தெரியும். அவைகளில் கூட, அவரிடம் இருந்த மனிதர்கள் ஒற்றுமையாக இருந்தார்கள் என்று காணப்படவில்லை.



காரணம் பசுவும், பக்ஷிகளும் மஹான்களிடம் இருந்து வரும் அருளை தடுப்பதில்லை. அது ஸ்வதந்திரமாக தன்னிடம் வேலை செய்ய விட்டுவிடுகின்றன. ஆனால் மனிதர்கள் அந்த அருளை நான், எனது என்று இரண்டு விஷயங்களால் தடுத்து விடுகின்றார்கள். இதுவே அதற்கு காரணம்.

**கேள்வி: பக்தி மார்க்கம் மட்டும் போதும் என்றால், தியான மார்க்கம், கர்ம மார்க்கம், ராஜயோகமார்க்கம், ஞான மார்க்கம் மற்றும் பல விதமான உபாசனைகளை மஹரிஷிகள் உலகிற்கு எடுத்து காண்பித்தது ஏன்? பக்தி மார்க்கத்தை மட்டும் காண்பித்து விட்டு போயிருக்கலாமே?**



பதில்: முதலில் நாம் பள்ளியில் சேருகின்றோம். அப்பொழுது தாய்மொழி, ஆங்கிலம், கணிதம், சரித்திரம், பூகோளம், ஸயன்ஸ் போன்ற பாடங்கள் நமக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. +1, +2 வரும்பொழுது ஏதாவது ஒரு subjectஐ special-ஆக தேர்ந்தெடுக்க சொல்கின்றார்கள். அவன் ஸயன்ஸ் எடுத்து கொண்டால் எம்.பி.பி.எஸ். படிக்கின்றான். மேலே எம்.டி. படிக்க ஆசைப்படும்பொழுது SKIN, Heart, மகப்பேறு, புற்று நோய், கண் போன்ற ஏதாவது ஒரு துறையை மட்டும் Specialise செய்ய சொல்கின்றார்கள். மேலே Doctorate என்று போகும் பொழுது அதிலும் ஒரு தனி பிரிவை எடுத்து படித்து அந்த துறைக்கு அவனும் சில contributions செய்கின்றான். அதுபோல்தான் நமக்கு எல்லா மார்க்கங்களை பற்றிய அறிவும் தெளிவும் இருந்தால்தான், நமக்கு எதில் ஆசையோ நமக்கு எது சரிப்பட்டு வருமோ அதில் செல்ல முடியும். இந்த யுகத்தில் நாமகீர்த்தனம் ஒன்றுதான் பெரும்பாலோரால் பின்பற்றக்கூடிய ஒரே மார்க்கம்.

## ஸ்ரீஸ்வாமிஜியின் சிந்தனையில் உதித்த பொன்மலர்கள்

- மரணம் என்ற அசுரன் நம்மை துரத்துகின்றான். LIFETIME என்ற கால அவகாசத்திற்குள் நாம் ஓடி ஓடி மோக்ஷம் என்ற இடத்தை அடைந்து விட வேண்டும். அப்படி ஓடும்பொழுது நம்மை ஆசைகள் வந்து தடுத்து திசை திருப்ப பார்க்கும். அதனால் நாம் வேகம் தடைப்பட்டு கால அவகாசத்திற்குள் மோக்ஷம் என்ற கோல்போஸ்ட்டை(Goalpost) அடையவில்லை என்றால் மீண்டும் ஆரம்பத்திலிருந்து நம்மை மரணம் துரத்த ஆரம்பிக்கும். மோக்ஷம் என்ற (Goalpost)கோல்போஸ்ட்டை அடைந்து விட்டால், அங்கு மரணதேவதையால் உள்ளே வரமுடியாது.

- அவர்கள் எவ்வளவோ படித்தவர்கள்; அவர்கள் எவ்வளவோ பெரியவர்கள்; அவர்கள் எவ்வளவோ ஜப, தியானங்கள் செய்கின்றார்கள்; அவர்களாலேயே பகவானை பார்க்க முடியவில்லை; நம்மால் எப்படி முடியும் என்று அதைரியப்படாதே! பகவான் கிருபை இருந்தால் அவர்களுக்கெல்லாம் கிடைக்காதது நமக்கு கிடைக்கும். ஆனால் கற்பனையில் மிதக்காமல், சோம்பேறித்தனம் இல்லாமல், மஹாமந்திர கீர்த்தனம் செய்து வா.

- நான் தியானம் செய்வதை பத்து நபர்களாவது பார்த்தால்தான் என்னால் தியானம் செய்ய முடிகின்றது என்று ஒருவர் என்னிடம் தெரிவித்தார். சிலருடைய நிலை இப்படி கூட இருக்குமோ என்று நினைத்து வியந்தேன்.



- யம, நியம, ஆசன, பிராணாயாம, பிரத்யாஹார, தாரணை, தியானம், சமாதி என்ற அஷ்டாங்க யோகத்தினால்தான் ஞானம் சித்திக்கும் என்று நினைக்க வேண்டாம். சிரவணம், ஸ்மரணம், கீர்த்தனம், பாதஸேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், சக்யம் , ஆத்மநிவேதனம் போன்ற நவவிதமான பக்திஸாதனங்களாலேயே ஞானம் சித்திக்கும்.

- ஒருவருக்கு அவருக்கு பிடித்த வேலையை செய்ய கொடுத்தால் அதை உடனே உற்சாகமாக செய்வார். அவருக்கு பிடிக்காத வேலையை கொடுத்தால், அது அவருக்கே நன்மை பயக்க கூடியதாக இருந்தால் கூட வேண்டா வெறுப்பாக கடமையே என்று செய்வார். அதுபோல்தான் நம்முடைய மனதும். காமம், பொழுதுபோக்கு, உல்லாசம் போன்ற விஷயங்களை அதனிடம் கொடுத்தால் உத்ஸாஹமாக செய்கின்றது. ஜபம், தியானம், நாமகீர்த்தனம் போன்ற விஷயங்களை அதற்கு கொடுத்தால், உற்சாகமில்லாமல் கடமையே என்று செய்கிறது.

மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி அவர்களின்
பாகவத உபன்யாசம்
இடம்: சென்னை நாரதகானசபா
தேதி: 2011 , ஜனவரி 12 முதல் ஜனவரி 18 வரை
நேரம் : மாலை - 6.30 - 8.30



# பாகவத பழம் 9

**இரண்டாம் பாகம்**

– ஸ்ரீஸ்வாமிஜி

பொதுவாக பகவானை "ஸ்வாமி" என்று சொல்வது உண்டு. ஸ்வம்' என்றால் சொத்து. சொத்துடையவன் ஸ்வாமி. ஜகத்" என்ற சொத்தை உடையவன்தான் ஸ்வாமி". உலகத்தை படைப்பதால் இவனுக்கு என்ன பயன்? யாராவது அவனைப் படைக்கச் சொல்லி கட்டளையிட்டார்களா? அவனை கட்டளை இடுவதற்கு ஒருவர் இருந்தால் அவர் ஸ்வாமி" ஆகிவிடுவார். ஆகவே, அவனைப் ப்ரேரணை செய்ய யாரும் கிடையாது.

இதைச் செய்வதால்தான் அவனுக்கு ஆனந்தம் என்றால் அதுவும் சரியாகாது. ஒன்றைச் செய்தால் ஆனந்தம் அல்லது செய்யாமல் இருந்தால், ஆனந்தம் என்றால், அவன் ஆத்மாராமன் இல்லை. அதாவது தனக்குத் தானே ரமிக்கக் கூடியவன் இல்லை என்றாகிவிடும். அதாவது ஞானமில்லாதவனாக ஆகிவிடுவான். அப்படி என்றால் உலகத்தை ஏன் படைத்தான்? ஏனென்றால் அவனுக்கு அது லீலையாம்! பஞ்ச பூதங்களைக் கொண்டு உலகத்தைப் படைத்தான். அவற்றிலும் அக்னி, ஜலம், மண் என்று மூன்றும் கண்களுக்குப் புலப்படக் கூடியதால், ப்ரதானமானவை.

உலகத்தைப் படைத்தவிதம், படைத்த காரணம், நடத்தும்விதம், முடிவான லயம் போன்ற ரகசியத்தை எல்லாம் பரம கருணையோடு ஆதி கவியானவரும், தேவர்களிலும் சிரேஷ்டமான பகவான் பிரும்மாவிடம் தெரிவித்தான். எப்படி தெரிவித்தான்? ஹ்ருதயத்தில் தானாகவே ஸ்புரிக்கச் செய்தான். இந்த உலகம் பிரளயத்திற்கு முந்தைய சிருஷ்டியில் எப்படி இருந்ததோ, இப்பொழுது அப்படியே உள்ளது. அதற்கு முன்பும் அப்படியே இருந்தது என்ற தியான ஸ்லோகம் ஆரம்பித்து. அந்த பிரும்மாவிடம் வேதத்தின் ஸாரத்தை, கலியுகத்திற்கு



ப்ரத்யேகமான வேதத்தை, அதாவது ஸ்ரீமத் பாகவதத்தை தந்தருளினான்.

"ஆதிகவி" என்று ப்ரும்மதேவனை தியானஸ்லோகத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. அவர் அளித்தது வேதம். கவிதை என்றால் நவரசமும் இருக்கவேண்டும் அல்லவா? வேதத்தில் நவரசம் எங்கிருக்கின்றது என்றால், வேதத்தில் ப்ரும்ம ரசம் நிரம்பி உள்ளது. ப்ரும்ம ரசத்தில் மற்ற அனைத்து ரசமும் அடங்கும்.

"தாம்னா ஸ்வேன சதா நிரஸ்த குஹகம்" ... இந்த மாபெரும் ச்ருஷ்டியை தனது மாயையால் செய்தாலும், தன்னுடைய ஸ்வயம் பிரகாசத்தினால் அந்த மாயையிலிருந்து விலகியே இருக்கிறாராம். முழுஸ்லோகத்தினுடைய அர்த்தமாக பாகவதம் நம்மை எதை தியானம் செய்ய அழைக்கிறது?

ஏதோ ஒரு அற்ப விஷயத்தை அல்ல! எந்த ஒரு பரமாத்மா இந்த ஜகத்தின் சிருஷ்டி, ஸ்திதி, லயத்திற்கு காரணமோ , அப்படியாக இருந்தபோதிலும் எந்த விதமான மாற்றத்தையும் அது அடையாமல் இருக்கின்றதோ, எது ஸர்வக்ஞனோ, ஸத்யவஸ்துவோ ப்ரும்மாவின் இருதயத்தில் வேதத்தை தூண்ட செய்து , சூரிகளும் மயங்கும் இந்த சிருஷ்டியில், தனது தேஜஸால் மாயையை விலக்கி இருக்கும் அந்த பரம்பொருளையே, தியானம் செய்ய நம்மை அழைக்கிறது பாகவதம்.

உள்ளிருக்கும் அந்த பரம்பொருள் ஒரு "மினுக்கு மினுக்கு"ம் வரைதான், இந்த பிரபஞ்சமானது தெரியும். உள்ளிருக்கும் அந்த பரமாத்மா ஒரு "டால"டித்தால் இந்த பிரபஞ்சம் முற்றிலும் மங்கி விடும்.

கலியுகத்தில் பாகவத தர்மமே கதி. மற்ற தர்மங்களின் நிலை எப்படி இருக்கும் என்றால் அந்த தர்மங்களை விட்ட ஜனங்களும், தர்மங்களைச் செய்வது போல் நடிக்கும் ஜனங்களும்தான் இருப்பார்கள். கபடமில்லாத தர்மம் பாகவத தர்மம். கபடமாக

அனுஷ்டிக்கக் கூடியவனையும்கூட கபடமில்லாமல் செய்யக்கூடியது. ஹ்ருதயத்தில் உள்ள மூன்று விதமான தாபங்களையும் போக்கக்கூடியது. ஜன்மாந்திரத்திலோ, காலாந்திரத்திலோ இல்லாமல் கேட்கும்பொழுதே பலன் தரக்கூடியது. "ஸுஸ்ஷ்ருஷிபி: தத்க்ஷணாத்" என்று சொல்லியிருப்பதால், பாகவதத்தை படிப்பதைக் காட்டிலும், கேட்பது சிரேஷ்டம் என்று ஆகின்றது.

வேதம் என்ற கற்பகவிருக்ஷத்தில் பழுத்த இந்த பாகவதப் பழத்தின் சுவையை அறிந்த சுகர் என்ற கிளி நமக்கு அந்த ரஸத்தை எடுத்துப் பருக அள்ளி அள்ளிக் கொடுக்கின்றார். நம்மைப் பார்த்து குடிக்கச் சொல்கின்றார். ரஸிக ஜனங்களும், பாவுக ஜனங்களும்தான் இதற்கு அதிகாரிகள் என்கின்றார். மீண்டும் மீண்டும் பருகுங்கள். பருகிக்கொண்டே இருங்கள் என்கின்றார். பருகப் பருகப் பாவம் போய், அதன் காரணமான அழுக்குகள் போய், வாஸனைகள் அழிய, சாதனை பக்தி ஏற்பட்டு, ராகபக்தி, சாக்ஷாத்காரம், ஞானம் எல்லாம் க்ரமமாக ஏற்படும். பாகவதமே கதி என்றிருக்க வேண்டும். இத்துடன் தியான ஸ்லோகம் பூர்த்தியாகின்றது.

(கனியும்)


**மதுரமுரளி சந்தாதாரர் ஆக விரும்புகிறவர்கள்**

Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை/ டி.டி./ மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். PH:+914424895875




## மன அமைதிக்கு உகந்த வழி

கேள்விகள் தவிர்க்க முடியாதவை. சிறு குழந்தை பேச ஆரம்பித்தவுடன் கேள்விகள் கேட்க ஆரம்பித்து விடுகின்றது. ஆன்மீகத்திலும் கேள்விகள் உண்டு. அர்ஜுனன் தனக்கு எழுந்த சந்தேகங்களை எல்லாம் கேள்விகளாக கேட்டுக்கொண்டே வர, அதற்கு கண்ணபிரான் அளித்த பதில்கள்தான், இன்று உலகம் போற்றும் பகவத்கீதை. புராணங்களும் உபநிடதங்களும் இப்படித்தான் கேள்வி, பதிலாக அமைந்துள்ளது.

நியாயமான கேள்விகளுக்கு பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். குதர்க்கமான கேள்விகளுக்கு பதில் தேவையில்லை. முட்டாள்தனமான சில கேள்விகள் கேட்பவரின் முட்டாள்தனத்தை பறைசாற்றி விடும். நல்ல பதில்கள் வரவேண்டுமானால், முதலில் நல்ல கேள்விகள் வேண்டும். நாமே கூட வாழ்க்கையில் பல கேள்விகளை கேட்கின்றோம். கஷ்டங்கள் வரும்பொழுது நான் யாருக்கு என்ன செய்தேன்? எனக்கு போய் இப்படி வந்து விட்டதே என்கின்றோம். பிறருடைய நன்மைகளை கண்டு பொறுத்துக்கொள்ள முடியாதவர்களும் உண்டு. அப்படிப்பட்டவர்கள் அவன் எப்படி நன்றாக இருக்கலாம் என்று கேட்பார்கள்.

கேள்வி, கேள்வியுடன் நின்றுவிட்டால் சமாதானம் ஏற்படாது. பதில் வேண்டும். எல்லோருக்கும் சமாதானம் தரக்கூடிய பதில்கள் வேதாந்தத்தில் உண்டு. வேதாந்தம் என்றால் ஓய்வு பெற்ற பின் என்று நினைக்கவேண்டாம். உலக வாழ்க்கைக்கே வேதாந்தம் அத்தகைய சமாதானத்தை தரக்கூடியது. நம்முடைய அலுவலகத்தில் நாம் பதவி உயர்வை எதிர்பார்த்திருக்கின்றோம். நிச்சயமாக வரும் என்று நினைத்திருந்தோம். வரவில்லை. சின்ன விஷயம்தான். ஆனால் தாங்க முடியவில்லை. நாமே நம்மை எவ்வளவோ சமாதானப்படுத்தி கொள்ள பார்க்கின்றோம். ஆனால் மனது கேட்க மாட்டேன் என்கின்றது.

அறிவு சொல்வதை எல்லாம் மனது கேட்டு விட்டால்தான் பரவாயில்லையே! அங்குதான் பிரச்சனையே ஆரம்பிக்கின்றது. டாக்டர் இனிப்பு சாப்பிடாதே, உனக்கு ஆபத்து என்கின்றார். பாதாம் அல்வாவை பார்க்கும்பொழுது, அறிவு, "சாப்பிடாதே, ஆபத்து" என்கின்றது. மனது,

"சாப்பிடு - பிறகு பார்த்து கொள்ளலாம்" என்கின்றது. எவ்வளவு பெரிய அறிவாளியினுடைய அறிவும், மனதினிடம் தோற்றுத்தான் போகின்றது. ஆசைக்கும் அறிவிற்கும் நடக்கும் போராட்டத்தில், ஆசைதான் பெரும்பாலும் வெல்லும். அதுதான் இன்று காணப்படும் தனி நபர் பிரச்சனையிலிருந்து சமுதாய பிரச்சனைகள் வரைக்கும் மூலகாரணம்.

நம்முடைய அலுவலகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்காமல், தத்தளிக்கும் மனதை, வேதாந்த சிந்தனைகள் ஒரு கணத்தில் சமாதானத்தை அடைய செய்து விடும். "நமக்கு விதிக்கப்பட்ட ஒன்றை எந்த ஒரு சக்தியாலும் தடுத்து நிறுத்தி விட முடியாது" என்பதுதான் அது. "நடக்க இருப்பது நடந்தே தீரும். நடக்க இயலாதது எம்முயற்சிக்கினும் நடவாது" என்பதுதான் வேதாந்தத்தின் சாரம். இது ஒன்றுதான் மன அமைதிக்கு உகந்த வழி.

நீ சரீரமல்ல, அழியாத ஆத்மா என்பதுதான் வேதாந்த மதத்தின் சாரம். ஆத்மாவோ ஆனந்த மயமானது. உன்னுடைய உண்மையான இயல்பே ஆனந்தம்தான். அதை மறந்து விட்டு நாம் துக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றோம். அந்த ஆத்மாவை கண்களால் பார்க்க முடியாது. தொட முடியாது. முகர முடியாது. கேட்க முடியாது. சுவைக்க முடியாது. ஐம்புலன்களுக்கும் விஷயமாகாத ஒரு பொருளை எப்படி நம்புவது என்கின்றாயா? கவலை, சுகம், துக்கம், பயம் போன்றவற்றை பற்றி நாம் அறிவோம். ஏன் என்றால் இவையெல்லாம் நம்மால் பார்க்கப்படாது போனாலும் உணரக்கூடியவை, மனதினால் இவைகளை உணர்கின்றோம்.

அதுபோல் ஆத்மாவை மனதினால் உணரலாமோ என்றால் அதுவும் முடியாது. ஏன், ஆத்மாவோ மனதிற்கும் அப்பாற்பட்டது. பின் எப்படி ஆத்மாவை அறிய முடியும்; ஆத்மா தன்னைத்தானே அறிவித்துக்கொள்ளுமே தவிர, வேறு ஒரு பொருளால் அதை அறிய முடியாது. சற்று புரியும்படி பார்ப்போம். ஒருவரை பார்த்து அறிவிருக்கின்றதா என்று கேட்டால், அறிவிருக்கின்றது என்கின்றான். அவன் தனக்கு அறிவிருக்கின்றது என்பதை தன்னுடைய அறிவை கொண்டே சொல்வது போல் ஆத்மா தன்னைத்தானே உணரும்.






2011 New Year Calendar from
Chaitanya Mahaprabhu Namabhiksha Kendra

PRANAMS TO THE LOTUS FEET OF HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI


Zaah
TECHNOLOGIES

OUR SOLUTIONS

SEARCH ENGINE OPTIMIZATION
WEB MARKETING
SOFTWARE DEVELOPMENT
WEB DEVELOPMENT

M/s. Zaah Technologies India Pvt. Ltd.,
Chennai 600 004
E-mail: contact@zaahindia.com

Our Humble Pranams to the Lotus feet of
His Holiness Sri Sri Muralidhara Swamiji



Gururam Consulting
Private Limited




## பாலகர்களுக்கு ஒரு கதை



## நரியல்ல புலிதான் கடவுள்!

நண்பர் ஒருவர் இருந்தார். அவருக்கு மிக நல்ல மனது. இறைவனை அடைய வேண்டும் என்ற பேரவா கொண்டிருந்தார். ஆனால் கடவுளை எப்படி அடைவது என்பது அவருக்கு தெரியவில்லை. கடுமையாக தவம் செய்யும் முனிவர்களே, அதை அறிவர் என்று படித்தும் பலர் சொல்லவும் கேட்டிருந்தார். அதன்படியே கடவுளை பற்றி அறிந்து கொள்வதற்காக ஒரு முனிவரை தேடி கொண்டிருந்தார். காட்டு வழியே அவர் ஒருமுறை செல்ல வேண்டி வந்தது. அப்பொழுது ஒரு குகையில் முனிவர் ஒருவர் தவம் இயற்றிக்கொண்டிருப்பதை பார்த்தார். அவரை அணுகி தெளிவு பெறுவது என முடிவு செய்தார். முனிவர் இவரை பார்த்ததும் புன்முறுவல் பூத்தார். அவரிடம் நண்பர்,

முனிவர் பெருமானே! எனக்கு ஒரு சந்தேகம்?

**கேளப்பா! என்ன உன் சந்தேகம்?**

கடவுளை அடையும் வழி என்ன? அதை சொல்லி தாருங்கள்!

**நீ என்ன கடவுளை ஒரு தனி மனிதர் என்று நினைத்துக்கொண்டாயா? அவர் எங்கும் நிறைந்தவர் அல்லவா? அவர் எல்லாம் அறிந்தவர்தானே!**

ஆம் ஸ்வாமி! அவர் எங்கும் நிறைந்தவர்தான். எல்லாம் அறிந்தவர்தான்.

**ஆதலால், அவரையன்றி வேறொரு பொருளும் உலகில் இல்லை என்பதை அறிந்துகொள். உனக்கு பக்குவம் இருந்தால், நீ பார்க்கும் அனைத்தும் உனக்கு குருவாக இருந்து உன்னை வழிநடத்தும். படிப்படியாக நீ கடவுளை பூரணமாக அறிய வாய்ப்பு உண்டு.**

மிக்க நன்றி ஸ்வாமி! நான் அப்படியே இருக்க முயல்கிறேன்.

தனக்கு போதித்த அந்த முனிவரை வணங்கி விட்டு மேலும் தமது யாத்திரையை தொடர்ந்தார். சிறிது தூரத்தில் மற்றொரு குகை தென்பட்டது. அங்கு சென்று நாமும் முனிவர் பெருமான் சொன்னதை செயலாக்குவது என்று நண்பர் முடிவெடுத்தார்.

அந்த குகைக்கு எதிர்த்தாற்போல் மற்றொரு குகை இருந்தது. அதிலிருந்து அப்பொழுது ஒரு நரி தத்தி தவழ்ந்து வந்தது. அதற்கு இரு முன்னங்கால்கள் இல்லை. அதை பார்க்கையில், நண்பருக்கு "அடடா! இப்படி ஒரு பிராணியை கடவுள் படைத்திருக்கிறாரே. இது

ஆகாரத்திற்கு என்ன செய்யும் என்று வியந்தார். அப்படி எண்ணுகையிலேயே அவருக்கு மேலும் ஒரு எண்ணம் தோன்றியது. நாம் இப்பொழுதுதானே நரியை பார்க்கிறோம். ஆனால் அது பிறந்ததிலிருந்து ஏதோ ஒருவழியில் ஜீவனம் செய்து வருகிறதே! அது எவ்வாறு நடக்கிறது. அப்படியெனில் அதற்கும் கடவுள் ஏதோ வழி வைத்து உள்ளார் என்று தோன்றியது. தமது புத்தியை தாமே மெச்சினார் நண்பர்.

சிறிது நேரத்தில் அங்கொரு புலி வந்தது. அது தான் வேட்டையாடிய மானை அங்கு கொண்டு வந்து தின்று விட்டு மிச்சம் மீதியை விட்டு சென்றது. அதையே நரியும் வந்து சாப்பிட்டு போனது. அதை பார்த்ததும் நண்பர் ஆச்சரியமடைந்தார். இப்படி இருநாட்கள் நடக்கவும், அதன் பின் நண்பருக்கு கடவுள் பேரில் மிகுந்த நம்பிக்கை உண்டாயிற்று. ஆஹா! கடவுள் எப்படி தன்னை நம்பிய நரியை கைவிடாமல் இருக்கிறார்! நாமும் அப்படியே கடவுளை நம்பியபடி வாழ்வது என முடிவு செய்தார்.

அதன் பின், நரி போலவே அவர் எங்கும் செல்லவில்லை. குகையிலேயே இருந்தார். தமக்கு இந்த அறிவை ஊட்டிய அந்த முனிவரை வாழ்த்திய அவர், நரி வாழ்ந்ததற்கு எதிர்த்த குகையிலேயே தொடர்ந்து வாழ தொடங்கினார். நரியையே பார்த்து கொள்ளும் இறைவன் தம்மை பார்த்து கொள்வான் என்று அவருக்கு நல்ல நம்பிக்கை. ஒரு நாளாயிற்று; இரு நாளாயிற்று; ஒரு வாரமாயிற்று; நரிக்குத்தான் ஆகாரம் கிடைத்ததே தவிர, இவருக்கு ஒன்றும் கிடைக்கவில்லை.

பத்து நாள் ஆகாரம் இல்லாது இருந்தபொழுது அவர் உடம்பு மிகவும் மெலிந்து போய் சத்தே இல்லாமல் இருந்தார். ஒரு தருணத்தில் நண்பர் மயங்கி விழுந்தார். மேலும் ஓரிரு நாட்களில் மரணத்தறுவாயையே எட்டினார். நண்பருக்கு இப்பொழுது கடவுள் மேலிருந்த நம்பிக்கை பறந்து போனது. முனிவர் சொன்னது போல் கேட்டோம். ஆனால் இப்பொழுது மரணமடையும் நிலையிலல்லாவா உள்ளோம் என்று தம்மைத்தாமே நொந்து கொண்டார்.

அப்பொழுது முதலில் கண்ட அதே முனிவர் அங்கு வந்து கவலையுடன் நம் நண்பரை பார்த்து "என்ன ஆயிற்று" என வினவினார்.



*நண்பர்: தங்கள் சொற்படி கேட்டதன் விளைவு!*

**முனிவர்: என்ன சொல்கிறாய்! விளக்கமாய் கூறு!**

*நீங்கள் எல்லாம் இறைவன் சொரூபம் என்றீர்கள் அல்லவா!*

**சொன்னேன் அதனால் என்ன?**

*அதோ அந்த குகையில் இரு கால்களுமற்ற நரி எங்கும் செல்வதில்லை. ஆனால் அதற்கு ஆகாரம் சுலபத்தில் கிடைக்கிறது.*

**எப்படி?**

*ஒரு புலி மானை அடித்து சாப்பிட்ட மாமிச மீதி அதற்கு கிடைக்கிறது!*

**அப்படியா! நல்லது!**

*தங்கள் உபதேசப்படி நரி ஒரு கடவுளின் சொரூபம் என்று அறிந்தேன். அது எங்கும் செல்லாமல் தன் ஜீவனத்தை நடத்துகிறதே!*

**முனிவர் பதில் பேசவில்லை ... மௌனம்..**

*அதனால் நானும் எங்கும் செல்லாது நரி போலவே இருந்தேன். பட்டினி கிடந்து கிடந்து, ஆகாரமற்று, இப்படி ஆகி விட்டேன். தங்கள் உபதேசப்படி நடந்த என் அவலத்தை பாருங்கள்!*

**முட்டாள்! நீ புலி செய்த செயலை அல்லவா செய்திருக்க வேண்டும். அது ஆகாரத்தை தேடி அல்லவா செல்கிறது. இரையை தேடி பிடித்து உண்கிறது. நரிக்கு உதவியாகவும் இருக்கிறது. நீ அது என்ன சொல்லி கொடுக்கிறதோ அதை அல்லவோ கேட்டிருக்க வேண்டும். நரிக்கு கால்கள் இல்லை. உனக்கு என்ன குறை இருக்கிறது. நீ ஏன் இந்த முடிவெடுத்தாய். கடவுள் தந்த புத்தியை உபயோகிக்காமல் சோம்பேறியாய் வாழ்வதா"** என கடிந்து கொண்டார்.

அப்பொழுதுதான் நண்பருக்கு சட்டென தமது அரைகுறை அறிவு புரிந்தது. கடவுளை உணர பக்குவம் தேவை என புரிந்து கொண்டார்.

*ஆண்டவன் இல்லாமல் ஆகாரம் கிடைக்கலாம்*
*கிடைத்தது செரிக்கவே உந்தீ பற*
*ஆண்டவன் வேண்டுமாம் உந்தீ பற*

*(ஸ்ரீஸ்வாமிஜியின் கலிதர்ம உந்தியார்)*

*சென்ற மாத நிகழ்ச்சிகள்*

**நவ 17 முதல் கிருத்திகா மண்டல வேதபாராயணம்** –சென்னை ப்ரேமிக பவனத்தில் கிருத்திகா மண்டல வேத பாராயணம் நடைபெற்று வருகிறது.

**நவம்பர் 30, டிசம்பர் 3 மற்றும் 4 – மாணவர்களுக்கான கூட்டு பிரார்த்தனை – பெங்களூர் , திருநெல்வேலி, தூத்துக்குடி** ஆகிய நகரங்களில் பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. திருநெல்வேலி, தூத்துக்குடி கூட்டு பிரார்த்தனைகளில் ஸ்ரீபாக்யநாதன் மற்றும் ஸ்ரீராமானுஜம் பேசினர். பெங்களூரில் இதே போன்று நடந்த கூட்டு ப்ரார்த்தனையில் ஸ்ரீராமானுஜம் மற்றும் ஸ்ரீகுருமூர்த்தி பேசினர். இந்த கூட்டு பிரார்த்தனைகளில், நான்காயிரத்துக்கும் மேற்பட்ட மாணவமணிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இறைவணக்கம், மாணவர்கள் எப்படி தங்களது தேர்வை நன்கு சந்திப்பது, அவர்களுக்கான ஆலோசனைகள், மஹாமந்திர கீர்த்தனம், தேசியகீதம் ஆகியவை இந்த பிரார்த்தனை கூட்டங்களில் இருந்தது.

**டிச 4 – பொய்கை** – வேலூர் பெங்களூர் சாலையில் வேலூர் அருகே 5கி.மீ தூரத்தில் ரெட்கிராஸ் சொஸைட்டியினால் நடத்தப்பெற்று வரும் ஆதரவற்ற முதியோர் மற்றும் சிறார்களுக்கான இல்லம் உள்ளது. இங்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் சென்று அங்குள்ளோர்களின் நலன்களை விசாரித்தார். இல்லத்திலிருந்த அனைவருக்கும் உடை மற்றும் குடைகள் வழங்கினார். மதியம் அன்னதானமும் விமரிசையாக செய்யப்பட்டது. குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடியை சேர்ந்த ஆம்பூர் அன்பர்கள் இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து அழகாக செய்திருந்தனர்.

**டிச 5 –ஆயுர்வேதமுகாம்** – சென்னை மஹோதயா ஹாலில் ஆயுர்வேதமுகாம் ஒன்று "அதர்வணீ ஆயுர்வேதா" சார்பாக நடைபெற்றது. வேதபண்டிதர்களும், அறிஞர்களும், மருத்துவர்களும் கலந்து கொண்ட இவ்விழாவில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். பாரம்பரியம் மிக்க இந்திய மருத்துவம் பற்றிய நிகழ்ச்சி என்பதால் குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி



டிரஸ்ட் இவ்விழாவை நடத்த உறுதுணையாயிருந்தது.

**டிச 5 – கோவூர் கூட்டு பிரார்த்தனை** –சென்னை ஆவடி அருகே உள்ள கோவூரில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் Global Organisation for Divinity சார்பாக மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. தனலக்ஷ்மி திருமணமண்டபத்தில் மாலை இரண்டு மணிநேரம் நடந்த இந்த சத்சங்கத்தில் ஏராளமான அன்பர்கள் கலந்து கொண்டனர். ஸ்ரீஸ்வாமிஜியின் அருளுரையும் மஹாமந்திரகீர்த்தனமும் பிரார்த்தனையும் நடைபெற்றது. Global Organisation for Divinityயை சேர்ந்த திரு.கோவூர் ஷண்முகம் மற்றும் அன்பர்கள் சேர்ந்து இந்நிகழ்ச்சியை நன்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

**டிச 17 – வைகுண்ட ஏகாதசி** – சென்னை ப்ரேமிக பவனத்தில் வைகுண்ட ஏகாதசியை ஒட்டி ஸ்ரீனிவாசபெருமாளுக்கு திருமஞ்சனம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களால் செய்யப்பட்டது. காலை பத்து மணிக்கு மேல் மதுரபுரி ஆஸ்ரமத்தில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதனுக்கு விசேஷ திருமஞ்சனமும் மாலை கருடவாஹனத்தில் புறப்பாடும் நடைபெற்றது. அனைத்து நாமத்வார் மையங்களிலும் குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி சார்பாக அகண்ட மஹாமந்திரகீர்த்தனம் ஏற்பாடு செய்யப்பட்டு நடந்தேறியது.

**டிச 19–25 – தெய்வத்தமிழ் இசைவிழா** – சென்னை மஹோதயாஹாலில் சைதன்ய மஹாபிரபு நாம பிக்ஷா கேந்திரா சார்பாக நான்காம் வருட தெய்வத்தமிழ் இசை விழா மிக கோலாகலமாக நடைபெற்றது. துவக்க நாள் அன்று சிறப்பு விருந்தினர்களாக ஸ்டார் விஜய் டிவியின் Channel Head ஸ்ரீ K.ஸ்ரீராம் அவர்களும், திருவையாறு அரசு இசைக்கல்லூரியின் முதல்வர் ஸ்ரீமதி உமாமகேஸ்வரி அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். குத்து விளக்கை ஏற்றி ஸ்ரீஸ்ரீராம் விழாவை துவக்கி வைத்தார். தெய்வத்தமிழ் இசையானது எப்படி பல்வேறு காலகட்டங்களில் வளர்ந்து வந்தது என்பதை மிக அழகான பாடல்களை மேற்கோளிட்டு, ஸ்ரீமதி உமாமகேஸ்வரி அவர்கள் பேசினார். அதன் பின் தொடர்ந்து ஏழு நாட்கள் தெய்வத்தமிழ் இசை அரங்கத்தையும் வந்திருந்த திரளான அன்பர்களின் மனதையும் நிறைத்தது என்றால் அது மிகையல்ல.

**ஸ்ரீமத் பாகவத உதயாஸ்தமன சப்தாஹம் - 'சுக்தால்' யாத்திரை**

ஸ்ரீ மாதுரிஸகீ சமேத ஸ்ரீப்ரேமிகவரத டாகுர்ஜீ மற்றும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் க்ருபையால் 2011ம் வருடம், மே 1 முதல் 9 தேதி வரை ஸ்ரீமத்பாகவத உதயாஸ்தமன சப்தாஹம் டெல்லி அருகே (சுகர் பரிக்ஷித்திற்கு சொன்ன 'சுக்தால்') நடைபெற உள்ளது. இதில் கலந்துகொள்ள விரும்புவோர், கட்டணம், யாத்திரை விதி மற்றும் விவரங்களறிய - திரு.ராம்குமார் - 09952808262 மற்றும் திரு.காசிநாதன் - 09380338951 ஆகியோரை தொடர்பு கொள்ளவும். விண்ணப்பிக்க கடைசி தினம் ஜனவரி 15, 2011.




**தர்மம் செய்தால் கர்மம் போகும்.**

- பூண்டி சுவாமிகள்



## சனாதனப் புதிர் : பகுதி – 22 விடைகள்

–ஆத்ரேயன்



1. மத்ஸ்ய தேசத்து அரசனான விராடனின் பெண். பிருஹந்நளையிடம் (அஞ்ஞாத வாசத்தின்பொழுது அர்ஜுனன்) இருந்து பாட்டு, நாட்டியம் பயின்றாள். அர்ஜுனன் / சுபத்ரா இவர்களுக்கு பிறந்த அபிமன்யுவை மணந்தாள். போரில் அபிமன்யு இறந்த பொழுது கர்ப்பமாக இருந்தாள். பிறகு பரீக்ஷித் பிறந்தான். ஆகவே பாண்டவர் வம்சம் தொடர காரணமாக இருந்தவள் உத்தரா.

2. ராம நாமம் – ராமானந்தர், கபீர், துளசீதாசர், பத்ராசலம் ராமதாசர், தியாகராஜ ஸ்வாமிகள், போதேந்திராள், சத்குருஸ்வாமிகள். கிருஷ்ண நாமம் – நிம்பார்க்கர், ஞானேஸ்வர், நாமதேவர், துக்காராம், புரந்தரதாசர், கனகதாசர், சூர்தாஸ், மீராபாய், வல்லபாசார்யர், ஜயதேவர், கிருஷ்ண சைதன்யர், நரஸீமேத்த, சங்கர தேவா, பிரபுபாதா மற்றும் பலர்.

3. 9 காண்டங்கள், 109 சர்க்கங்கள், 12323 ஸ்லோகங்கள்

4. குசன் – சம்பிகா; லவன் – சுமதி; யூபகேது – மதனசுந்தரி (யூபகேது – சத்ருக்னரின் பிள்ளை)

5. ஆனந்த ராமாயணத்தில்; ஏழாவது காண்டம் – ராஜ்ய காண்டத்தில் ராம ஸஹஸ்ர நாமம்; எட்டாவது காண்டம் – மனோஹர காண்டத்தில் கவசங்கள் காணப்படுகின்றன.

6. ராமர் – சீதை – லவன் (ச்ராவஸ்தி) குசன் (குசாவதீ) லக்ஷ்மணன் – ஊர்மிளை , அங்கதன் (காருபதம்) சந்திரகேது (சந்திரகாந்தா தேசம்) பரதன் – மாண்டவி – தக்ஷன் – (தக்ஷஸீலம் புஷ்கலன் (புஷ்கலாவதம்) சத்ருக்னன் – ஸ்ருதகீர்த்தி – சுபாகு (மதுரா) சத்ருஜாதி (வைதிகா)

7. மூன்று பட்டை விபூதி அணிவதை திரியக் புண்ட்ரம் என்கிறார்கள். இந்த மூன்று பட்டைகள் – ரிக், யஜீர், சாமவேதங்கள்; அ, உ, ம என்கிற பிரணவம்; சத்வ, ரஜஸ், தமஸ் என்கிற சக்திகள், சத், சித், ஆனந்தம் (இப்படி பலவாறாக சொல்லலாம்)

8. வேதவியாசரின் 4முக்கிய சிஷ்யர்களில் ஒருவர் – இவருக்கு அதர்வண வேதம் பாடம் சொல்லப்பட்டது.

9. வெங்கு அய்யர் – பார்வதி அம்மாள்; எம்.பி.பி.எஸ் (மருத்துவம்) "ஸ்வாமி விஸ்வானந்த சரஸ்வதி" – ரிஷிகேஷ்.

10. ரூபகோஸ்வாமி , சனாதன கோஸ்வாமி, ஜீவ கோஸ்வாமி

சனாதனப் புதிர் - பகுதி - 23 (விடைகள் அடுத்த இதழில்) -ஆத்ரேயன்

1. கங்கை நதியில் பெரும் வெள்ளம் ஏற்பட்டு ஹஸ்தினாபுரம் மூழ்கியதால் அதை ஆண்ட அரசன் தனது தலைநகரத்தை வேறு இடத்திற்கு மாற்றினான். அரசன் பெயர் என்ன? இடத்தின் பெயர் என்ன?

2. ஐந்து விதமான பொருட்களை யாகத்தில் "ஹவிஸ்" ஆக கொடுக்கலாம். அந்த பொருட்கள் யாவை?

3. இதிஹாஸம், புராணம் என்ற வார்த்தைகளை வேதத்தில் எங்கே காணலாம்?

4. வஸு காமேஷ்டி, பாவகாமேஷ்டி என்ற யாகங்கள் எதற்கு செய்யப்படுகின்றன?

5. கார்த்தவீர்யார்ஜுனன் எந்த தேசத்து அரசன்? தத்தாத்ரேயரை பூஜித்ததால் என்ன கிடைத்தது? எந்த முனிவரை கொன்றான்? யாரால் கொல்லப்பட்டான்?

6. பகவான் ஸ்ரீகிருஷ்ணரை பற்றிய விவரங்கள் எந்த இதிஹாஸ புராணங்களில் காணப்படுகின்றன?

7. இராமரின் பிள்ளையான குசனின் மனைவிகள் பெயர் என்ன?

8. வாமன, பரசுராம, ராம, கிருஷ்ண அவதாரத்தின் பொழுது லக்ஷ்மிதேவியின் பெயர் என்ன?

9. மனுஸ்மிருதியில் எத்தனை ஸ்லோகங்கள் இருக்கின்றன. இதற்கு யார் உரை எழுதி இருக்கின்றார்கள்?

10. "மிலேச்சர்கள்" - இவர்களை பற்றி எங்கே காணப்படுகிறது?




உதிர்ந்த மலர்கள்

பாகம்-1

1995ஆம் ஆண்டு முதல் மதுரமுரளி மாதப்பத்திரிக்கையில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கருத்தாழம் மிக்க உயரிய எண்ணங்கள் இடம் பெற்று வருகின்றன. ஸ்ரீஸ்வாமிஜியின் சிந்தனையில் உதித்த மலர்களை தொகுத்து, உதிர்ந்த மலர்கள் என்ற புத்தக வடிவில் சைதன்யமஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா வெளியிட்டு உள்ளது.

New Releases from:
Chaitanya Mahaprabhu NamaBhiksha Kendra
Pl call - 91444-24895875 for details



# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி

## ஸ்வாமி க்ருஷ்ணானந்தஜி-4



வ்ரஜத்தில் பஜனானந்தம் உடைய பல சித்த கௌடிய மகாத்மாக்கள் இருந்தனர். அவர்களுள் பண்டித ராமகிருஷ்ணதாஸ் பாபாஜி என்பவர் முக்கியமானவர். க்ருஷ்ணானந்தஜி அவருடன் சங்கம் வைத்துக்கொண்டார். இதனால் அவருக்கு பரம கருணையான பதித பாவனரான ஸ்ரீமகாபிரபுவிடம் பக்தி மேலோங்கியது. வங்காள மொழியை கற்று ஸ்ரீசைதன்ய சரிதாம்ருதம் மற்றும் சைதன்ய பாகவதம் போன்ற கிரந்தங்களை, பாராயணம் செய்ய ஆரம்பித்தார். நாளுக்கு நாள் அவருக்கு சைதன்யதேவரின் மீது, பக்தி பெருகிக்கொண்டே இருந்தது. அதனால் ஒரு கௌடிய மகாத்மாவிடமிருந்து, தீக்ஷை பெற்று மகாபிரபுவின் சரணங்களில், ஆத்மசமர்ப்பணம் செய்வதாக அவர் முடிவெடுத்தார்.

சில நாட்களுக்கு பின் அவர் கிவாடி வனம் எனும் ஒரு வனத்தில் குடிலமைத்து அங்கு பஜனை செய்ய தொடங்கினார். அப்பொழுது ஸ்ரீமாதவதாஸ் பாபாஜியும் கிவாடிவனத்தில்தான் தங்கியிருந்தார். மாதவதாஸ் பாபாஜி ஒரு சித்த வைஷ்ணவ மஹாத்மா. அவருடைய அருளாலேயே ஸ்ரீகிருஷ்ணானந்தஜி வைஷ்ணவ குரு கிடைக்க பெற்றார். மாதவதாஸ் பாபாஜி அவரிடம் "தங்களை போன்ற வித்வான் மற்றும் தேஜஸ்வியான ஒருவருக்கு தகுந்த குரு ஸ்ரீப்ராணகோபால்ஸ்வாமி ப்ரபுபாதர்தான். அவர் நியானந்தரின் வம்சத்தில் வந்தவர். மாத்வகௌடீய வைஷ்ணவ சம்பிரதாயத்தில் ஒரு மாபெரும் தூண் போன்றவர். இன்னும் சில நாட்களில் அவர் பிருந்தாவனம் வருவார். சற்று பொறுமையாக காத்திருந்தால் நான் உனக்கு அவரிடமிருந்தே தீக்ஷை பெற்று தருவேன்" என்று கூறினார்.

க்ருஷ்ணானந்தஜியும் ஸ்ரீப்ராணகோபால் ப்ரபுபாதரின் வரவை ஆவலோடு எதிர்பார்த்தார். சில நாட்களுக்கு பின் பிரபுபாதர் அங்கு வந்தார். அவர் வந்ததும் அவரது கதை காலக்ஷேபம் எனும் அம்ருதம் பொழிய ஆரம்பித்தது. அவரது ப்ரவசனத்தை கேட்டு க்ருஷ்ணானந்தர்

மிகவும் பாதிக்கப்பட்டார். அவரையே தனது குருவாக மானசீகமாக வரித்தார். பின்பு ஒரு நாள் நல்ல முகூர்த்தத்தில் அவரிடமிருந்து தீக்ஷை பெற்று கொண்டார்.

தீக்ஷை பெற்ற பின் வ்ரஜத்தில் ஹிண்டோல் என்னும் கிராமத்திலிருந்து கொண்டு பஜனை செய்ய ஆரம்பித்தார். இந்த இடத்தில் ஒரு உயர்வான இடத்தில் ஊர் மக்கள் அவருக்கு ஒரு குடிலமைத்து தந்தனர். பாபா அதிலேயே வசிக்கலானார். நடுநடுவில் வ்ரஜத்தின் மற்ற கிராமங்களில் உலாவுவார். ஆனால் எங்கு சென்றாலும் கடைசியில் இவ்விடத்திற்கே வந்து விடுவார். இவ்வாறு பஜனை செய்து கொண்டிருந்த அவருக்கு சில காலம் கழிந்ததும் ஒரு பிரச்சனையை எதிர்கொள்ள நேர்ந்தது. குருதேவர் அவருக்கு மதுரபாவத்தில் பக்தி செய்யுமாறு உபதேசித்திருந்தார். ஆனால் அவரது ஹிருதயமோ ஸ்வபாவமாக ஸக்ய பாவத்திலேயே ஈடுபட்டது. மிகவும் முயன்ற போதும் அவரால் மதுரபாவனையை ஏற்க முடியவில்லை. ஸக்ய பாவம் நாளுக்கு நாள் அவருக்கு த்ருடம் ஆகிக்கொண்டே இருந்தது.

அவரது கவலை என்னவென்றால், குருதேவரின் ஆக்ஞைக்கு விருத்தமாக ஸக்ய பாவத்தில் உபாஸனை செய்தால் அது பலிதமாகுமா என்பதே! ஒரு நாள் குருதேவர் ஸ்ரீவனம் வந்திருப்பதாக அறிந்து அவரை பார்த்து இந்த பிரச்சனைக்கு தீர்வு காணவேண்டுமென்று விரைந்தார். பிருந்தாவனம் போகும் வழியில் அவர் கண்களில் ஒரு காகிதம் தென்பட்டது. ப்ரபுவின் ப்ரேரணையினால் அதை எடுத்து படித்தார். அதில் அவரது மனக்குழப்பத்திற்கு , அவரது பாவனைக்கு அனுகூலமாக ஒரு ஸமாதானம் குறிக்கப்பட்டு இருந்தது. அதை படித்ததும் அவர் ஹிருதயம் பொங்கியது. கண்களிலிருந்து ஆனந்த கண்ணீர் பெருகியது. அதே பாவத்துடன் கையில் அக்காகிதத்தை எடுத்து கொண்டு குருதேவரிடம் சென்றார். குருதேவரை பார்த்து நடந்தது அனைத்தையும் கூறி தனக்கு ஒரு தீர்வு அளிக்குமாறு பிரார்த்தித்தார். ஸக்ய பாவத்தில் அவரது இயற்கையான ஈடுபாட்டை கண்டு குருதேவர் ஆனந்தமாக அவரை அதிலேயே பக்தி செய்யும்படி அனுமதி அளித்தார்.

(தொடரும்)



## மாலே மணிவண்ணா – 91

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

குளிர்ந்த கருணையால் தன்னடைந்தாரைக் காக்கும் தன்மை போல, அவர்களுக்கு துன்பம் செய்தாரை வருத்தும் சக்கரத்தையும் உடையவராக இருக்கிறாராம் திருமால். இன்ப ஆக்கத்துக்கு தண்ணளியும், துன்ப நீக்கத்துக்கு சக்கரமும், உடையவராய், "அகமும் புறமும் ஆனந்த மயமாக உள்ள திருமால்" என்று சொல்லி அறிமுகத்தை தொடரும் அழகு, நுகரும்தொறும் இன்பம் பயப்பது.

மழைக்காலம் வருகிறது. பெரிய மேகத்தால் அழகு பெறுகிறது ஆகாயம். இரண்டு பக்கத்திலும் சூரியன் சந்திரன் என்ற இரு சுடர்களும் இலங்குகின்றன. அதுபோல ஒருபுறம் சக்கரமும், ஒருபுறம் சங்கும் ஏந்திய திருக்கரங்களை உடையவனாய் பெருமான் காட்சியளிக்கின்றானாம். இந்த காட்சியை பரிபாடல் மூலமாக அகக்கண்ணால் கண்டு அனுபவித்த ஜைனமாமுனிவர் இளங்கோ அடிகள் நெஞ்சு மிக்கது வாய் சோர்ந்து, சிலப்பதிகாரத்தில் மாங்காட்டு மறையவன் கூற்றாக,

வீங்கு நீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்கு உயர் மலையத்து உச்சி மீ மிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
இருமருங்கு ஓங்கிய இடைநிலைத்தானத்து
மின்னுக்கோடி உடுத்து விளங்கு வில் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங்கு ஆழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக்கையின் ஏந்தி
நலங்கிளர் ஆரம் மார்பின் பூண்டு
பொலம் பூ ஆடையின் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணம்? (சிலப் 11.41.21)

என்று அற்புதமாக பாடி ஆனந்தம் அடைகிறார். பரிபாடல் காட்சியும்

சிலப்பதிகார காட்சியும் திருமால் தரிசனத்தில் ஒன்றாக அமைந்தது தமிழ் தந்த தெய்வ நலம் அல்லவா?

மழை பெய்தற்குரிய மின், இடி முதலிய தொகுதிகளை உடைய மேகத்திடத்து மின்னல் விளங்குதலை போல விட்டுவிட்டு விளங்கும் பொன்னால் ஆகிய ஆபரணங்களை அருவியை போன்ற முத்து மாலைகளோடு சேர்த்து அணிந்து இருக்கின்ற உன்னுடைய அழகிய மலை போன்ற மார்பினை உடைய திருமேனியை வணங்குபவர்களுக்கு உனக்கு உரியதாக நீ எப்பொழுதும் எழுந்தருளி இருக்கின்ற அப்பரமபதம் என்னும் வீடு நன்கு உரிமை உடையதாகும் அல்லவா?

பருவம் வாய்த்தலின் இரு விசும்பு அணிந்த
இருவேறு மண்டிலத்து இலக்கம் போல
நேமியும் வளையும் ஏந்திய கையான்
கருவி மின்னவிர் இலங்கும் பொலம்பூண்
அருவி உருவின் ஆரமோடு அணிந்த நின்
திருவரை அகலம் தொழுவார்க்கு
உரிது அமர் துறக்கமும் உரிமை நன்குடைத்து

பருவம் - கார்ப்பருவம்; இருவேறு மண்டிலம் - சந்திர , சூரியர். மண்டிலம் - வட்டம் ; இலக்கம் - தோற்றம்; நேமி - சக்கரம்; வளை - சங்கு; கையான் - கையோடு; ஆன் உருபு ஒடு உருபின் பொருளில் வந்தது; "தூங்கு கையான் ஓங்கு நடைய யானை" என்புழிப்போல; கருவி - தொகுதி. ஆரம் - முத்து வடம் - வரை அகலம் - மலை போன்ற மார்பு; உரிது அமர் - உனக்கு உரிமையாக பொருந்திய; துறக்கம் - வீடு பேறு - திருமால் நெறியில் பரமபதம்.)

திருமாலின் திருக்காட்சி கண்டு வழிபடுவோர்களுக்கு பரமபதம் உரிமையானது என்று உறுதியளித்து அனைவரையும் வழிபடுமாறு அழைத்தவர், திருமால் எங்குமாய் எல்லாமாய் நிறைந்த பெருமையை அடுத்து சொல்ல வருகிறார்.

(தொடரும்)



## அக்ஷரமணமாலை (ஸ்ரீஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து-174)

வைதலை வாழ்த்தா - என்ற பாட்டில் ரமண மஹரிஷிகள் தாம் தமது பாட்டில், எங்காவது நிந்தனை செய்வது போல் பகவானுக்கு தோன்றினாலும் கூட, அதையும் பகவான் அருணாசலேஸ்வரன், துதியாகவே கொள்ளல் வேண்டும் என்று அழகாக விண்ணப்பிக்கிறார். ஆதிசங்கரரும் கூட சிவானந்த லஹரியில், தாம் செய்யும் செயல் அனைத்தையுமே பகவான் துதியாகவும் பூஜையாகவும் கொளல் வேண்டும் என்று சொல்கிறார். அதுபோலவே இதுவும் அமைகிறது. அப்படி பகவான், தமது கடுமையான சொற்கள் போன்றவற்றையும் துதியாக கொள்வதோடல்லாமல், தனது அருள்குடியான அருணையை விட்டு அகலாது வைத்திருக்கவும் பிரார்த்திக்கிறார்.

அடுத்ததாக "அம்புவிலொலி போல் அன்புருவுனிலெனை" என்ற பாட்டில் பக்தி என்பது அன்பை அடிப்படையாக கொண்டது எனபதை சொல்கிறார். இஷ்ட தெய்வத்திடம் கொள்ளும் அன்புதான் பக்தி. தெய்வமே அன்புருவாகத்தான் இருக்கிறது. "அன்பே சிவம்" என்கிறோம். அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் என்கிறார் திருமூலர். அன்பு மயமான சிவஸ்வரூபமாக ஆகவேண்டும் என்றால், பிரும்மஸ்வரூபமாக ஆகவேண்டும் என்று பொருள். ஆயின், அன்பில்லாமல் அவனை அடைவதற்கு சாத்தியமே இல்லை. அன்பை நாம் சரியான இடத்தில் வைக்காமல் உலகின் மேல் வைத்து துன்புறுகிறோம். சிரங்கை நோண்டினால் துன்பமும் சுகமும் வருவதுபோல் உலக வாழ்க்கை இருக்கிறது. இதை விடுத்து பகவானிடம் அன்பை வைத்து பழக வேண்டும். இந்த மாற்றம் குருவருளால்தான் சாத்தியம். குரு சீடனை விடாமல் துரத்தி சென்று அன்பான பகவத்ஸ்வரூபத்தில் சேர்க்கிறார். அன்பின் லக்ஷியமே அன்பால் இறைவனோடு கலந்து விடுவதுதான்.

"அருணையென்றண்ணையான் .. உன் அருள்வலை தப்புமோ" என்ற பாட்டில் சூசகமாக தமக்கு எப்பொழுதும் அருணாசலேஸ்வரனின் ஸ்மரணம் இருந்தது என்கிறார். அப்பரும் சமணம் விட்டு மாறி வந்தவர் எனினும், "கருவிற் பிறந்த நாள் முதல்" தமக்கு பரமனின் நினைவு இருந்ததாக சொல்வது ஒப்பு நோக்கத்தக்கது. தன்னை ஸ்மரிப்பவனை அருள்வலையிட்டு பகவான் இழுத்து கொள்கிறான். அதிலிருந்து ஒருவரும் தப்புவதில்லை என்பதையும் இதில் சொல்கிறார்.

"சிந்தித்தருட்பட சிலந்திபோல் கட்டி" - முதலில் நான் - அருணை என்று உனை நினைத்தேன். நீ அருள் வலையிட்டாய் என்றார்.

இதிலோ சிந்தித்து அருள்பட என்கிறார். அஃதாவது தாம் "அருணையை - பகவானை" முதலில் நினைத்ததற்கும் பகவான் தம்மை பற்றி முதலில் நினைவு கூர்ந்ததே காரணம் என்கிறார். "அவனருளாலே அவன்தாள் வணங்கி" எனும் சிவபுராண வரிகள் இப்படியே அமைகிறது. சிலந்தி எப்படி தனது வலையில் விழுவதை கொஞ்சம் கொஞ்சமாக உண்கிறதோ, அதே போல் பகவான் தமது ஜீவபோதத்தை கொஞ்சம் கொஞ்சமாக களைந்தான் என நயமாக கூறுகிறார்.

"அன்போடுன்னாமங்கே" - பகவானை அடைந்த பிறகும் சாதுக்கள் சத்சங்கத்தையே பிரார்த்திக்கின்றனர். பாகவதமும் மஹான்களின் சரித்திரமும் இதை பறை சாற்றுகின்றது. பகவத் கதைகளையும், பகவான் லீலைகளையும், பகவானின் நாமங்களையும் அன்புடன் சொல்லி வரும் சாதுக்களின் சங்கத்தையே சாதுக்கள் விரும்புவர். அது மட்டுமல்ல, அப்படிப்பட்டவர்களுக்கு கைங்கரியம் செய்ய விரும்புவர். ஏனெனில் பகவானே அப்படி இருக்க விரும்புகிறானே? வந்திப்பாட்டியின் கதையும், தாயுமானவரின் சரித்திரமும் இதைத்தானே சொல்கிறது. "முப்போதும் திருநீறு பூசுவோர்க்கு அடியேன்" என சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் திருத்தொண்டத்தொகையில் இறைவனை அடைந்த பிறகும் பல்விதமாய் அடியவர்க்கு அடியவராய் இருக்க விழைவதை ஒப்பு நோக்குக.

"என்போலும் தீனரை" எனும் பாட்டில் தமக்கு பகவான் அருள் செய்ததை போல பலருக்கும் இப்படி அருள் செய்து எக்காலமும் இருக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறார். பிரஹ்லாதன் தனக்கு மட்டும் நாராயணனின் அருள் கிடைத்தது போதாது; பிறருக்கும் அவனருள் கிடைக்க வேண்டும் என்று வேண்டுகிறான். அப்படியே ரமணரும் வேண்டுவதினாலேயே, பகவான் அங்கு எந்நாளும் வாழ்ந்து பலருக்கும் அருள் செய்ய போகிறான் என்பது நிச்சயமாகி விட்டது. இப்பாடல் ஒரு மங்களாசாஸனமாக பகவானுக்கு அமைகிறது.

"என்புருகன்பர்தம் இன் சொற்கள்" - "தமக்கு முன்பு, பல பல பக்தர்கள் எவ்வளவு அருமையாக எலும்பை உருக்குவதை போல் அன்புடன் பாடியுள்ளனர். (ஞானசம்பந்தர் பாடியபொழுது, எலும்பாக இருந்த பூம்பாவை உயிர் பெறவில்லையா?) நானோ அப்படி பாடவில்லை. பகவானான உன்னையே நிந்தனை செய்வது போல் அவ்வப்பொழுது கோபித்தும் கொண்டுள்ளேன். இருப்பினும் இந்த அக்ஷரமணமாலையை ஏற்று அருள் புரிவாயாக" என்பது போல்,



பகவானிடம் பிரார்த்தனை செய்கிறார் ரமண மஹரிஷிகள்.

"பொறுமையாம் பூதர" என்னும் பாடலில் - அருணாசலா! இவ்வளவு பொறுமையாக என் பாடல்களை கேட்ட நீ அருள் செய்வாய், அல்லாவிடில் அது உன் இஷ்டம் என்கிறார். இது மிக காம்பீர்யமாக அமைந்து இருக்கிறது. இறுதியாக 108வது பாட்டில் "மாலையளித்தருணாசல" எனும் பாட்டில் அருணாசல ரமணனான தனது அக்ஷரமணமாலையை(பாமாலை) பகவான் ஏற்றுக்கொண்டு, பிரதியாக தமக்கு பகவான் ஒரு மாலை தர வேண்டும் என பிரார்த்திக்கிறார்.

Madhuramurali
- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.

### ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஜன - 16,30 | ஏகாதசி |
| பிப்ரவரி 14,28 | ஏகாதசி |
| ஜனவரி 1, 2011 | தஞ்சாவூரில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை |
| ஜனவரி 4 | ஹனுமத் ஜெயந்தி |
| ஜனவரி 12 - 18 | சென்னை நாரதகானசபா பாகவத சப்தாஹம் |
| ஜனவரி 23 | புதுக்கோட்டை யோகிராம்சுரத்குமார் கோவில் கும்பாபிஷேகம் |
| ஜனவரி 24 | வத்தலகுண்டு கோவில் கும்பாபிஷேகம் |
| பிப்ரவரி 8 | கல்யாணஸ்ரீனிவாசபெருமாள் கோவில் பிரதிஷ்டாதினம் - வசந்தபஞ்சமி- மஹாரண்யம் |
| பிப்ரவரி 12 | சிவராத்திரி - பெங்களூர் |
| பிப்ரவரி 13 | தூத்துக்குடியில் புதிய நாமத்வார் திறப்பு |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.